# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 56/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்லக்குமார் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of October 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் விவசாய தொழில் செய்கிறேன். மங்களாபுரத்தில் வசித்து வருகிறேன். மனுதாரர் காசியம்மாள் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் எனது தூரத்து உறவினர் என்றால் சரிதான். விபத்து தேதியில் நான் ஊரில் தான் இருந்தேன். விபத்து

மெயின் ரோட்டில் நடைபெற்றது என்றால் சரிதான். மெயின் ரோட்டிலிருந்து எங்கள் ஊருக்கு சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். விபத்து சம்பவத்தை கேள்விப்பட்டுத்தான் நான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் நான் மெயின் ரோட்டில்தான் நின்றுகொண்டிருந்தேன். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்து நடுரோட்டில் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் காயம்பட்ட சுப்பையா என்ற காசி என்பவரை 108 ஆம்புலன்சில் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள், நானும் உடன் சென்றேன். மங்களாபுரத்தை சேர்ந்த எனது உறவினர் காசி என்பவரும் எங்களுடன் 108 ஆம்புலன்சில் உடன் வந்தார். ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னது யார் என்ற விவரம் எனக்கு தெரியாது- எனது மைத்துனர் காசியை நீதிமன்றத்தில் விசாரித்தால் மேற்படி விவரங்கள் குறித்து துலங்கும் என்றால் சரிதான். நான் விபத்து சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் எனது உறவினர்கள் என்ற காரணத்தினால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல-

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi